(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 66 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2009, சனவரி 23, வெள்ளிக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0058 / '08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஏற்றுமதி அபிவிருத்தி, சர்வதேச வர்த்தக அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த மூன்று வருடங்களில் ஏற்றுமதி அபிவிருத்தி, சர்வதேச வர்த்தக அலுவல்கள் அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுப் பயணங்களின் எண்ணிக்கையையும்,

(ii) விஜயம் செய்த நாடுகளையும், மற்றும்

(iii) பயணச்சீட்டுக்கள் மற்றும் ஹோட்டல் கட்டணங்கள் என்பவற்றின் செலவுகளுடன் ஒவ்வொரு பயணத்திற்குமான மொத்தச்செலவை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உடன்சென்ற நபர்களின் எண்ணிக்கையையும்,

(ii) அவர்களின் பெயர்கள் மற்றும் அவர்களுக்கென ஏற்பட்ட செலவுகள் என்பவற்றை வெவ்வேறாகவும், அத்துடன்,

(iii) ஒவ்வொரு வெளிநாட்டுப் பயணத்திற்குமான பிரதான காரணத்தையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) அப்பயணங்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை, மற்றும்

(ii) அப் பயணங்களுக்கென வழங்கப்பட்ட குறை நிரப்புச் செலவினம் என்பவற்றையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0084 / '08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 'மிஹின் எயார்' கூட்டிணைக்கப்பட்ட திகதியினையும்,

(ii) அதன் முதலாவது வர்த்தக விமானம் சென்ற திகதியையும்,

(iii) 'மிஹின் எயார்' ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து இற்றைவரையிலான அதன் பணிப்பாளர்களின் பெயர்களையும்

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) ஒவ்வொரு நபருக்கும் வழங்கப்பட்ட சம்பளம், மிஹின் விமான சேவையைப் பயன்படுத்த வழங்கப்பட்ட விமானச் சீட்டு, ஏனைய விமானச் சேவைகளைப் பயன்படுத்த வழங்கப்பட்ட விமானச் சீட்டு மேலும் வழங்கப்பட்ட வேறு ஏதாவது நன்மைகள் என்பவற்றை ஒவ்வொரு நபர் அடிப்படையிலும் வருட அடிப்படையிலும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) கொடுக்கப்பட்ட வேறு ஏதாவது நன்மைகளையும் மேலும் கொடுக்கப்பட வேண்டிய வேறு ஏதாவது நன்மைகளையும்,

(ii) இயக்கப்பட்ட நாளிலிருந்து மாதாந்த தேறிய இலாபத்தையும் மொத்த இலாபத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0874 / '08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) குருநாகல் மாவட்டத்திலுள்ள தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையினை அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) குருநாகல் மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு ஏப்பிறல் 01 ஆம் திகதி முதல் இற்றைவரையில் புதிதாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு திறந்துவைக்கப் பட்ட மதுபான விற்பனை நிலையங்கள், வெளிநாட்டு மதுபான விற்பனை நிலையங்கள், சாராயக் கடைகள், உணவு விடுதிகள் மற்றும் ஹோட்டல்களின் எண்ணிக்கையினையும்,

(ii) அவற்றிலிருந்து 2004 முதல் 2007 ஆம் ஆண்டு வரையிலும் இற்றைவரையும் ஒவ்வொரு வருட முடிவிலும் உள்ளவாறாக கிடைத்த வருமானத்துடன் அவற்றின் பெயர்களை தேர்தல் தொகுதி அடிப்படையில்,

(iii) மேலே (i) இலுள்ள தகவலை 1998 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 இல் உள்ளவாறாகவும் குருநாகல் மாவட்டத்திற்கான மொத்த வருமானத்தினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0883 / '08

4.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரகவளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) "புரொன்பிரிஜ்" மின்பிடி கம்பனி இந்நாட்டில் மீன்களை இறக்குகின்றன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) "புரொன்பிரிஜ்" மீன்பிடி கம்பனியிடமுள்ள கலங்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) அவற்றின் பதிவு இலக்கங்கள் யாவை,

(iii) 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு கலமும் இந்நாட்டில் இறக்கிய மீன்களின் அளவு எவ்வளவு,

(iv) அவற்றின் உள்நாட்டுப் பெறுமதி என்ன

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) (i) இந்த மீன்பிடி கம்பனிக்கு காலி வர்த்தக துறைமுகத்தில் மீன்களை இறக்க எந்த அடிப்படையின் கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ளது,

(ii) மேற்படி மீன்பிடி கம்பனி கடந்த ஐந்து ஆண்டுகளில் முகத்துவார மீன்பிடி துறைமுகத்திலிருந்து மீன்களை இறக்கியதன் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தின் நிதிப்பெறுமதி எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0915 / ' 08

5.

கௌரவ பேமசிறி மானகே,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் சுனாமி பேரழிவினால் பாதிக்கப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) சுனாமி பேரழிவினால் பாதிக்கப்பட்ட வீடுகள், பிரதான குடும்பங்கள் மற்றும் துணைக் குடும்பங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iv) இந்தத் துணைக் குடும்பங்களுக்கு வீடுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(v) ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிற்கும் ஏற்ப துணைக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி பிரதேசங்களில் வாக்காளர் இடாப்பில் பெயர்கள் பதிவு செய்யப்பட்ட போது பின்பற்றப்பட்ட கொள்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0896 / ' 08

6.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெலிக்கடை, ராஜகிரியவில் இயங்கிவந்த “லக் சதொச” (பஜட் ஷொப்) நிறுவனக் கட்டிடம் மற்றும் காணியின் உரிமையாளர்கள் யாவர்,

(ii) பஜட் ஷொப் நிறுவனத்தின் உரிமை எவரிடமிருந்தது,

(iii) தற்போது மேற்படி கட்டிடத்தினதும் காணியினதும் உரிமை எவரிடமுள்ளது,

(iv) பஜட் ஷொப் நிறுவனம் இயங்கிவந்த கட்டிடத்தினதும் காணியினதும் உரிமை, நிறுவனம் மூடப்பட்ட வேளையில் அற்றுப்போனமைக்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இந்த வளவில் பஜட் ஷொப் நிறுவனத்தை அங்குரார்ப்பணம் செய்தவேளையில் அதன் உரிமை தொடர்பான உடன்படிக்கையில் சம்பந்தப்பட்ட அமைச்சு தலையிட்டதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0931 / ' 08

7.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2008 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் நடைபெற்ற அவசரகாலச்சட்ட விவாதத்தின்போது சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களுக்கிணங்க (ஹன்சாட் பிரதி இலக்கம் 174/6) வடக்கு கிழக்கு யுத்த நடவடிக்கைகளின்போது குறித்த காலப்பகுதியில் ஒவ்வொரு திகதியிலும் மரணமடைந்த தரைப்படையினர், கடற்படையினர், விமானப்படையினர் மற்றும் பொலிசாரின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபை க்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவர்கள் இணைக்கப்பட்டிருந்த முகாம் அல்லது சேவை நிலையம் யாது,

(ii) மரணமடைந்த / காயமுற்ற வேளையில் அவர்கள் சேவையில் ஈடுபட்டிருந்த நடவடிக்கை மற்றும் மரணமடைந்த தினம் யாது,

(iii) அவர்களின் பெயர்கள் மற்றும் தனிப்பட்ட முகவரிகள் யாவை,

(iv) இவர்களில் தங்கிவாழ்பவர்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவு எவ்வளவு

என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிட்டவர்களுக்காக சம்பளமும் ஓய்வூதியமும் செலுத்தப்படுமாயின் அக்கொடுப்பனவுகளைப் பெறுபவர்கள் யாவர்,

(ii) அது எப்பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகம் மூலமாக

என்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0953 / '08

8.

கௌரவ பாலித ரங்கே பண்டார,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இராணுவத்தில் சேவையாற்றுகின்ற கெப்டன் எஸ். ஏ. டி. பி. திசாநாயக்கவும் அவருடைய தாயாரும் 2006.11.08 ஆம் திகதி கடுவெல, வெலிவிட்ட, 409ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள பெட்றிக் புல்ஜன்ஸ் அவர்களின் வீட்டுக்குள் பலவந்தமாகப் பிரவேசித்து வீட்டிலிருந்தவர்களைக் கொலை செய்யப் போவதாக மிரட்டி பெறுமதியான ஆவணங்களையும் புகைப்படங்கள் சிலவற்றையும் எடுத்துச் சென்றுள்ளனரென்பதையும்,

(ii) இது தொடர்பாக திரு.புல்ஜன்ஸ் 2006.11.08ஆம் திகதி 397/142 சீ.ஐ.பீ. 3 ஆம் இலக்கத்தின் கீழ் வெல்லம்பிட்டி பொலிசிலும் அன்றைய தினமே சி.சி.எம்.பி – சி.ஐ.பீ .59ஆம் இலக்கத்தின் கீழ் இலங்கை இராணுவ பொலிசில் கட்டளையிடும் அதிகாரியிடமும் முறைப்பாடு செய்துள்ளார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) அது தொடர்பாக இற்றைவரை விசாரணை மேற்கொள்ளப்படவில்லை என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) (i) மேற்படி விசாரணையை நடத்தாமை தொடர்பாக 2007.02.09ஆம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் எச்.ஆர்.சி./886/07/01 (viii) ஆம் இலக்கத்தின் கீழ் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) அரசியலமைப்பின் 12(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் புல்ஜன்ஸ் அவர் களின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக அங்கு பரிந்துரைக்கப் பட்டுள்ள தென்பதையும்,

(iii) அப்பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும்படி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இராணுவ பொலிசுக்கும் வெல்லம்பிட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும் அறிவித்துள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஈ) சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் இற்றைவரை விசாரணைகளை நடத்தாததால் இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடு வாரா?

(உ) இன்றேல், ஏன்?

0954 / '08

9.

கௌரவ பாலித ரங்கே பண்டார,– போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,–

(அ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையின் யட்டிநுவர டிப்போவில் வலுமின்சார நிபுணராக திரு. ஜீ. எஸ். பிரேமசந்திர 12 வருடம் கடமையாற்றியுள்ளா ரென்பதையும்,

(ii) 2005.11.04 ஆம் திகதியன்று யட்டிநுவர டிப்போவின் கீழ் முற்றத்தின் மேற் கம்பிகளை திருத்துகின்ற வேளையில் ட்றோ வைஸிலிருந்து கேபல் விடுபட்டு உடம்பில் சுற்றியதால் திரு. பிரேமசந்திர மின்கம்பத்திலிருந்து கீழேவிழுந்து விபத்துக்குள்ளானார் என்பதையும்,

(iii) மேற்படி விபத்தின் காரணமாக திரு. பிரேமசந்திரவின் இடுப்பிலும் கைகளிலும் காயங்கள் ஏற்பட்டதால் வைத்தியசாலையில் தங்கிருந்து சிகிச்சை பெற்றுள்ளாரென்பதையும்,

(iv) மேற்படி விபத்தின் காரணமாக திரு. பிரேமசந்திரவுக்கு 6 மாதங்களுக்கும் அதிகமான காலமாக கடமைக்குச் சமூகமளிக்க முடியவில்லை என்பதையும்

அவர் அறிவாரா ?

(ஆ) மேற்படி காலத்துக்காக திரு. பிரேமசந்திரவுக்கு சம்பளம் வழங்கப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(இ) (i) மேற்படி விபத்துக்காக திரு. பிரேமசந்திரவுக்கு இழப்பீடு வழங்கும்படி தொழில் திணைக்களத்தின் கண்டி மாவட்ட தொழிற்சாலை கண்காணிப் பாளரால் 2006.11.01 ஆம் திகதியன்று கண்டி பஸ் கம்பனியின் உதவி முகாமைத்துவ பொறியியளாலருக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ள தென்பதையும்,

(ii) கண்டி பஸ் கம்பனியின் உதவி முகாமைத்துவ பொறியியளாலரின் பணிப்புரையின்படி திரு. பிரேமசந்திரவுக்கு இழப்பீடு வழங்கும்படி பரிந்துரை வழங்கப்பட்டுள்ளதென்பதையும்,

(iii) மேற்படி இழப்பீடு இற்றை வரை வழங்கப்படவில்லை என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா ?

(ஈ) (i) மேற்படி பணத்தை திரு. பிரேமசந்திரவுக்கு உடனடியாக வழங்க அவர் நடவடிக்கையெடுப்பாரா என்பதையும்,

(ii) ஆமெனில், அது எப்போதென்பதையும்

அவர் தெளிவுப்படுத்துவாரா ?

(உ) இன்றேல், ஏன் ?

0982 / ' 08

10.

கௌரவ ஜினதாச கித்துலகொட,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,– (1)

(அ) (i) கிராம உத்தியோகத்தர் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை எப்போது நடைபெற்றது என்பதையும்,

(ii) மேற்படி பரீட்சையின் பெறுபெறுகளின்படி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டது எக் காலக்கட்டத்தில் என்பதையும்,

(iii) அதன்படி மேற்படி நியமனங்களை வழங்க தற்போது நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மாத்தறை மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் மேற்படி பதவிக்கு நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி வெற்றிடங்களை பூர்த்திச் செய்வதற்கு எத்திகதிக்கு முன் நடவடிக்கை எடுக்கப்படுமென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0983 / ' 08

11.

கௌரவ ஜினதாச கித்துலகொட,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) தனியார்மயமாக்கப்பட்ட அரச நிறுவனங்களில் எவையேனும் மீண்டும் அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படு கின்றதா என்பதையும்,

(ii) ஆமெனில், அவை யாவையென்பதையும்,

(iii) அவ்வாறு பொறுப்பேற்பதற்கான நோக்கம் யாதென்பதையும்,

அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி நிறுவனங்கள் பொறுப்பேற்கப்படும் போது இழப்பீடு வழங்கப் படுமா என்பதையும் ,

(ii) ஆமெனில், அவற்றுக்கான இழப்பீட்டை மதிப்பிடுவது எந்த நிறுவனம் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0984 / ' 08

12.

கௌரவ ஜினதாச கித்துலகொட,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) மாத்தறை திஹகொட நீர் வழங்கல் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது,

(ii) எக்காலகட்டத்தினுள் இக்கருத்திட்டம் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்,

(iii) ஏதேனும் காரணத்தினால் தற்போது இதன் வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளனவா,

(iv) அவ்வாறெனில், அதற்கான காரணம் யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0987 / '08

13.

கௌரவ எம். டீ. நாமல் கருணாரத்ன,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் 2007/2008 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ள நியமனங்கள் எவை என்பதையும்,

(ii) அந்த நியமனங்கள் எந்த அடிப்படையில் வழங்கப்பட்டன என்பதையும்,

(iii) வடமேல் மாகாணத்தில் அரசின் ஆட்சேர்ப்பு விதிமுறைக்கு அப்பாற்பட்ட வகையில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iv) அவ்வாறு வழங்கப்பட்டிருப்பின் அது எந்த விதிமுறையின் அடிப்படையில் என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) வடமேல் மாகாணத்தில் தொண்டர் அடிப்படையில் அந்தந்த நிறுவனங்களில் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0988 / ' 08

14.

கௌரவ எம்.டீ. நாமல் கருணாரத்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) பாடசாலை அதிபர் (III) ஆம் தரம் மற்றும் 2 (II) ஆம் தரம் ஆகியவற்றிற்கு ஆட்சேர்ப்பதற்காக நடைபெற்ற பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப் படுவதற்கு முன்னர் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவால் பாடசாலை அதிபர்களை ஆட்சேர்க்கும் பொருட்டு நேர்காணல் பரீட்சைகள் நடத்தபப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி நேர்காணல் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்கான குறைந்தபட்ச புள்ளிகள் என்ன என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) நேர்காணல் பரீட்சைக்குத் தோற்றியவர்களின் பெயர்ப் பட்டியலையும் குறித்த பரீட்சையின் பெறுபேறுகள் பட்டியலையும் அவர் சபைக்குச் சமர்ப்பிபாரா?

(ஈ) நடத்தப்பட்ட நேர்காணல் பரீட்சையின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட நியமனதாரர்களது பெயர்ப் பட்டியலொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) ஆமெனில், குறித்த பெயர்ப் பட்டியலை அவர் இச் சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

0994 / '08

15.

கௌரவ வை.எம்.நவரத்ன பண்டா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) எமது நாட்டில் தற்போது காணப்படுகின்ற ஆசிரியர் நிலையங்களின் எண்ணிக்கை யாது,

(ii) அவை அமைந்துள்ள கல்வி வலயங்கள் வெவ்வேறாக யாவை,

(iii) ஆசிரியர் நிலைய முகாமையாளர்கள் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளனரா,

(iv) தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் சம்பந்தப்பட்ட சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளனரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஆசிரியர் நிலைய முகாமையாளர்களின் சிக்கல்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளதா,

(ii) அவ்வேளையில் உடன்பட்ட விடயங்கள் யாவை,

(iii) மேற்படி உடன்பட்ட விடயங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன் ?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.1) — 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2008.06.05 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணிவரையும் பி. ப. 1.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரையும் இருக்குமாக. பி.ப. 2.00 மணிக்கு 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் (5) ஆம் பந்தி தொழிற்படுமாக.

2.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.2) — இப் பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும்போது 2009 பெப்புருவரி மாதம் 05 ஆம் திகதி வியாழக்கிழமை மு. ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்படுமாக.

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

ரணவிரு சேவா அதிகாரசபை (திருத்தம்) சட்டமூலம்—இரண்டாம் மதிப்பீடு.

*2.

தேசிய புடைவை மற்றும் உடுதுணி நிறுவகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*3.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (எ) ஆம் பந்தியின் கீழ் தேயிலைச் சபையால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2008, சனவரி மாதம் 10 ஆம் திகதிய 1531/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ``2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபை(தேயிலைத் தொழிற்சாலைகளின் நிர்மாணமும் தொழிற்பாடும்) குறைந்தபட்ச நியமங்கள் ஒழுங்குவிதிகள்'' அங்கீகரிக்கப்படுமாக.

*4.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*5.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*6.

விலங்குகள் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*7.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*8.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*10.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*11.

இலங்கை மின்சாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*12.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*13.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*14.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*15.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*16.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*17.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*18.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு

அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*20.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப் படுத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப் படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்படவேண்டுமென இப்பாராளுமன்றத்தி னால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின்

கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*23.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— ``(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*24.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

25.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

26.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.

ஸ்ரீ பாத கல்பவருக்ஷ அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

விலங்குகளுக்குக் கொடுமையிழைத்தலைத் தடுப்பதற்கான இலங்கைச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

கொலன்னாவ பௌத்த இளைஞர் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

30.

இலவச பாலர் பாடசாலை அத்துடன் நலன்புரித்தொகுதி (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

31.

பலாத்காரமாக மதம் மாற்றுவதைத் தடைசெய்தல் சட்டமூலம் — பரிசீலனை.

32.

றங்கா கலை நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொளண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0875 / '08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) காலி மாவட்டத்திலுள்ள தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையினை அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) காலி மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு ஏப்பிறல் 01 ஆம் திகதி முதல் இற்றைவரையில் புதிதாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு திறந்துவைக்கப் பட்ட வைன் கடைகள், வெளிநாட்டு மதுபானக் கடைகள், உணவு விடுதிகள் மற்றும் ஹோட்டல்களின் எண்ணிக்கையினையும்,

(ii) அவற்றிலிருந்து 2004 முதல் 2007 ஆம் ஆண்டு வரையிலும் இற்றைவரையும் ஒவ்வொரு வருட முடிவிலும் உள்ளவாறாக கிடைத்த வருமானத்துடன் அவற்றின் பெயர்களை தேர்தல் தொகுதி அடிப்படையில்,

(iii) மேலே (i) இலுள்ள தகவலை 1998 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 இல் உள்ளவாறாகவும் காலி மாவட்டத்திற்கான மொத்த வருமானத்தினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0876 / '08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) மாத்தறை மாவட்டத்திலுள்ள தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையினை அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) மாத்தறை மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு ஏப்பிறல் 01 ஆம் திகதி முதல் இற்றைவரையில் புதிதாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு திறந்துவைக்கப் பட்ட வைன் கடைகள், வெளிநாட்டு மதுபானக் கடைகள், உணவு விடுதிகள் மற்றும் ஹோட்டல்களின் எண்ணிக்கையினையும்,

(ii) அவற்றிலிருந்து 2004 முதல் 2007 ஆம் ஆண்டு வரையிலும் இற்றைவரையும் ஒவ்வொரு வருட முடிவிலும் உள்ளவாறாக கிடைத்த வருமானத்துடன் அவற்றின் பெயர்களை தேர்தல் தொகுதி அடிப்படையில்,

(iii) மேலே (i) இலுள்ள தகவலை 1998 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 இல் உள்ளவாறாகவும் மாத்தறை மாவட்டத்திற்கான மொத்த வருமானத்தினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0877 / '08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையினை அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு ஏப்பிறல் 01 ஆம் திகதி முதல் இற்றைவரையில் புதிதாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு திறந்துவைக்கப் பட்ட வைன் கடைகள், வெளிநாட்டு மதுபானக் கடைகள், உணவு விடுதிகள் மற்றும் ஹோட்டல்களின் எண்ணிக்கையினையும்,

(ii) அவற்றிலிருந்து 2004 முதல் 2007 ஆம் ஆண்டு வரையிலும் இற்றைவரையும் ஒவ்வொரு வருட முடிவிலும் உள்ளவாறாக கிடைத்த வருமானத்துடன் அவற்றின் பெயர்களை தேர்தல் தொகுதி அடிப்படையில்,

(iii) மேலே (i) இலுள்ள தகவலை 1998 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 இல் உள்ளவாறாகவும் அம்பாந்தோட்டை மாவட்டத்திற்கான மொத்த வருமானத்தினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0878 / '08

4.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையினை அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) பொலன்னறுவை மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு ஏப்பிறல் 01 ஆம் திகதி முதல் இற்றைவரையில் புதிதாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு திறந்துவைக்கப்பட்ட வைன் கடைகள், வெளிநாட்டு மதுபானக் கடைகள், உணவு விடுதிகள் மற்றும் ஹோட்டல்களின் எண்ணிக்கையினையும்,

(ii) அவற்றிலிருந்து 2004 முதல் 2007 ஆம் ஆண்டு வரையிலும் இற்றைவரையும் ஒவ்வொரு வருட முடிவிலும் உள்ளவாறாக கிடைத்த வருமானத்துடன் அவற்றின் பெயர்களை தேர்தல் தொகுதி அடிப்படையில்,

(iii) மேலே (i) இலுள்ள தகவலை 1998 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 இல் உள்ளவாறாகவும் பொலன்னறுவை மாவட்டத்திற்கான மொத்த வருமானத்தினையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0879 / '08

5.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையினை அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு ஏப்பிறல் 01 ஆம் திகதி முதல் இற்றைவரையில் புதிதாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு திறந்துவைக்கப் பட்ட வைன் கடைகள், வெளிநாட்டு மதுபானக் கடைகள், உணவு விடுதிகள் மற்றும் ஹோட்டல்களின் எண்ணிக்கையினையும்,

(ii) அவற்றிலிருந்து 2004 முதல் 2007 ஆம் ஆண்டு வரையிலும் இற்றைவரையும் ஒவ்வொரு வருட முடிவிலும் உள்ளவாறாக கிடைத்த வருமானத்துடன் அவற்றின் பெயர்களை தேர்தல் தொகுதி அடிப்படையில்,

(iii) மேலே (i) இலுள்ள தகவலை 1998 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 இல் உள்ளவாறாகவும் அநுராதபுரம் மாவட்டத்திற்கான மொத்த வருமானத்தினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0880 / '08

6.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) களுத்துறை மாவட்டத்திலுள்ள தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையினை அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) களுத்துறை மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு ஏப்பிறல் 01 ஆம் திகதி முதல் இற்றைவரையில் புதிதாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு திறந்துவைக்கப் பட்ட வைன் கடைகள், வெளிநாட்டு மதுபானக் கடைகள், உணவு விடுதிகள் மற்றும் ஹோட்டல்களின் எண்ணிக்கையினையும்,

(ii) அவற்றிலிருந்து 2004 முதல் 2007 ஆம் ஆண்டு வரையிலும் இற்றைவரையும் ஒவ்வொரு வருட முடிவிலும் உள்ளவாறாக கிடைத்த வருமானத்துடன் அவற்றின் பெயர்களை தேர்தல் தொகுதி அடிப்படையில்,

(iii) மேலே (i) இலுள்ள தகவலை 1998 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 இல் உள்ளவாறாகவும் களுத்துறை மாவட்டத்திற்கான மொத்த வருமானத்தினையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0881/ '08

7.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கம்பஹா மாவட்டத்திலுள்ள தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையினை அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) கம்பஹா மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு ஏப்பிறல் 01 ஆம் திகதி முதல் இற்றைவரையில் புதிதாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு திறந்துவைக்கப் பட்ட வைன் கடைகள், வெளிநாட்டு மதுபானக் கடைகள், உணவு விடுதிகள் மற்றும் ஹோட்டல்களின் எண்ணிக்கையினையும்,

(ii) அவற்றிலிருந்து 2004 முதல் 2007 ஆம் ஆண்டு வரையிலும் இற்றைவரையும் ஒவ்வொரு வருட முடிவிலும் உள்ளவாறாக கிடைத்த வருமானத்துடன் அவற்றின் பெயர்களை தேர்தல் தொகுதி அடிப்படையில்,

(iii) மேலே (i) இலுள்ள தகவலை 1998 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 இல் உள்ளவாறாகவும் கம்பஹா மாவட்டத்திற்கான மொத்த வருமானத்தினையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0882 / '08

8.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) கொழும்பு மாவட்டத்திலுள்ள தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையினை அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) கொழும்பு மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு ஏப்பிறல் 01 ஆம் திகதி முதல் இற்றைவரையில் புதிதாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு திறந்துவைக்கப் பட்ட வைன் கடைகள், வெளிநாட்டு மதுபானக் கடைகள், உணவு விடுதிகள் மற்றும் ஹோட்டல்களின் எண்ணிக்கையினையும்,

(ii) அவற்றிலிருந்து 2004 முதல் 2007 ஆம் ஆண்டு வரையிலும் இற்றைவரையும் ஒவ்வொரு வருட முடிவிலும் உள்ளவாறாக கிடைத்த வருமானத்துடன் அவற்றின் பெயர்களை தேர்தல் தொகுதி அடிப்படையில்,

(iii) மேலே (i) இலுள்ள தகவலை 1998 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 இல் உள்ளவாறாகவும் கொழும்பு மாவட்டத்திற்கான மொத்த வருமானத்தினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0932 / '08

9.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதத்தில் நடைபெற்ற வடக்கு கிழக்கு யுத்த நடவடிக்கைகளின்போது அந்த மாதத்தில் ஒவ்வொரு திகதியிலும் மரணமடைந்த மற்றும் காயமடைந்த தரைப்படையினர், கடற்படையினர், விமானப்படையினர் மற்றும் பொலிசாரின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபை க்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவர்கள் இணைக்கப்பட்டிருந்த முகாம் அல்லது சேவை நிலையம் யாது,

(ii) மரணமடைந்த / காயமுற்ற வேளையில் அவர்கள் சேவையில் ஈடுபட்டிருந்த நடவடிக்கை மற்றும் மரணமடைந்த தினம் யாது,

(iii) அவர்களின் பெயர்கள் மற்றும் தனிப்பட்ட முகவரிகள் யாவை,

(iv) இவர்களில் தங்கிவாழ்பவர்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவு எவ்வளவு

என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிட்டவாறு மரணமடைந்தவர்களுக்காக சம்பளமும் ஓய்வூதிய மும் செலுத்தப்படுமாயின் அக்கொடுப்பனவுகளைப் பெறுபவர்கள் யாவர்,

(ii) அது எப்பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகம் மூலமாக

என்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0933 / ' 08

10.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2008 ஆம் ஆண்டு மாச்சு மாதத்தில் நடைபெற்ற வடக்கு கிழக்கு யுத்த நடவடிக்கைகளின்போது அந்த மாதத்தில் ஒவ்வொரு திகதியிலும் மரணமடைந்த மற்றும் காயமுற்ற தரைப்படையினர், கடற்படையினர், விமானப்படையினர் மற்றும் பொலிசாரின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வள வென்பதை அவர் இச்சபை க்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவர்கள் இணைக்கப்பட்டிருந்த முகாம் அல்லது சேவை நிலையம் யாது,

(ii) மரணமடைந்த / காயமுற்ற வேளையில் அவர்கள் சேவையில் ஈடுபட்டிருந்த நடவடிக்கை மற்றும் மரணமடைந்த தினம் யாது,

(iii) அவர்களின் பெயர்கள் மற்றும் தனிப்பட்ட முகவரிகள் யாவை,

(iv) இவர்களில் தங்கிவாழ்பவர்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவு எவ்வளவு

என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிட்ட மரணமடைந்தவர்களுக்காக சம்பளமும் ஓய்வூதியமும் செலுத்தப்படு மாயின் அக்கொடுப்பனவுகளைப் பெறுபவர்கள் யாவர்,

(ii) அது எப்பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகம் மூலமாக

என்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0934 / '08

11.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2008 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதத்தில் நடைபெற்ற அவசர காலச்சட்ட விவாதத்தின்போது சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களுக்கிணங்க (ஹன்சாட் பிரதி இலக்கம் 175/1) வடக்கு கிழக்கு யுத்த நடவடிக்கைகளின்போது அந்த காலத்தில் ஒவ்வொரு திகதியிலும் மரணமடைந்த தரைப்படையினர், கடற்படையினர், விமானப்படையினர் மற்றும் பொலிசாரின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வள வென்பதை அவர் இச்சபை க்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவர்கள் இணைக்கப்பட்டிருந்த முகாம் அல்லது சேவை நிலையம் யாது,

(ii) மரணமடைந்த / காயமுற்ற வேளையில் அவர்கள் சேவையில் ஈடுபட்டிருந்த நடவடிக்கை மற்றும் மரணமடைந்த தினம் யாது,

(iii) அவர்களின் பெயர்கள் மற்றும் தனிப்பட்ட முகவரிகள் யாவை,

(iv) இவர்களில் தங்கிவாழ்பவர்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவு எவ்வளவு

என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிட்டவர்களுக்காக சம்பளமும் ஓய்வூதியமும் செலுத்தப்படு மாயின் அக்கொடுப்பனவுகளைப் பெறுபவர்கள் யாவர்,

(ii) அது எப்பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகம் மூலமாக

என்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0935 / '08

12.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2008 ஆம் ஆண்டு மே மாதத்தில் நடைபெற்ற அவசர காலச்சட்ட விவாதத்தின் போது சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களுக்கிணங்க (ஹன்சாட் பிரதி இலக்கம் 176/1) வடக்கு கிழக்கு யுத்த நடவடிக்கைகளின்போது குறித்த காலப்பகுதியில் ஒவ்வொரு திகதியிலும் மரணமடைந்த தரைப்படையினர், கடற்படையினர், விமானப்படையினர் மற்றும் பொலிசாரின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வள வென்பதை அவர் இச்சபை க்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவர்கள் இணைக்கப்பட்டிருந்த முகாம் அல்லது சேவை நிலையம் யாது,

(ii) மரணமடைந்த / காயமுற்ற வேளையில் அவர்கள் சேவையில் ஈடுபட்டிருந்த நடவடிக்கை மற்றும் மரணமடைந்த தினம் யாது,

(iii) அவர்களின் பெயர்கள் மற்றும் தனிப்பட்ட முகவரிகள் யாவை,

(iv) இவர்களில் தங்கிவாழ்பவர்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவு எவ்வளவு

என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிட்டவர்களுக்காக சம்பளமும் ஓய்வூதியமும் செலுத்தப்படு மாயின் அக்கொடுப்பனவுகளைப் பெறுபவர்கள் யாவர்,

(ii) அது எப்பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகம் மூலமாக

என்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0936 / ' 08

13.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2008 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் நடைபெற்ற அவசரகாலச்சட்ட விவாதத்தின் போது சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களுக்கிணங்க (ஹன்சாட் பிரதி இலக்கம் 176/6) வடக்கு கிழக்கு யுத்த நடவடிக்கைகளின்போது குறித்த கால எல்லையில் ஒவ்வொரு திகதியிலும் மரணமடைந்த தரைப்படையினர், கடற்படையினர், விமானப்படையினர் மற்றும் பொலிசாரின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவர்கள் இணைக்கப்பட்டிருந்த முகாம் அல்லது சேவை நிலையம் யாது,

(ii) மரணமடைந்த / காயமுற்ற வேளையில் அவர்கள் சேவையில் ஈடுபட்டிருந்த நடவடிக்கை மற்றும் மரணமடைந்த தினம் யாது,

(iii) அவர்களின் பெயர்கள் மற்றும் தனிப்பட்ட முகவரிகள் யாவை,

(iv) இவர்களில் தங்கிவாழ்பவர்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவு எவ்வளவு

என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிட்டவர்களுக்காக சம்பளமும் ஓய்வூதியமும் செலுத்தப்படு மாயின் அக்கொடுப்பனவுகளைப் பெறுபவர்கள் யாவர்,

(ii) அது எப்பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகம் மூலமாக

என்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0937 / ' 08

14.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2008 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் நடைபெற்ற அவசரகாலச்சட்ட விவாதத்தின்போது சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களுக்கிணங்க (ஹன்சாட் பிரதி இலக்கம் 176/15) வடக்கு கிழக்கு யுத்த நடவடிக்கைகளின்போது குறித்த கால எல்லையில் ஒவ்வொரு திகதியிலும் மரணமடைந்த தரைப்படையினர், கடற்படையினர், விமானப்படையினர் மற்றும் பொலிசாரின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவர்கள் இணைக்கப்பட்டிருந்த முகாம் அல்லது சேவை நிலையம் யாது,

(ii) மரணமடைந்த / காயமுற்ற வேளையில் அவர்கள் சேவையில் ஈடுபட்டிருந்த நடவடிக்கை மற்றும் மரணமடைந்த தினம் யாது,

(iii) அவர்களின் பெயர்கள் மற்றும் தனிப்பட்ட முகவரிகள் யாவை,

(iv) இவர்களில் தங்கிவாழ்பவர்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவு எவ்வளவு

என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிட்டவர்களுக்காக சம்பளமும் ஓய்வூதியமும் செலுத்தப்படு மாயின் அக்கொடுப்பனவுகளைப் பெறுபவர்கள் யாவர்,

(ii) அது எப்பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகம் மூலமாக

என்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0938 / ’08

15.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2008 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதத்தில் நடைபெற்ற வடக்கு கிழக்கு யுத்த நடவடிக்கைகளின்போது அந்த மாதத்தில் ஒவ்வொரு திகதியிலும் மரணமடைந்த மற்றும் காயமடைந்த தரைப்படையினர், கடற்படையினர், விமானப்படையினர் மற்றும் பொலிசாரின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவர்கள் இணைக்கப்பட்டிருந்த முகாம் அல்லது சேவை நிலையம் யாது,

(ii) மரணமடைந்த / காயமுற்ற வேளையில் அவர்கள் சேவையில் ஈடுபட்டிருந்த நடவடிக்கை மற்றும் மரணமடைந்த தினம் யாது,

(iii) அவர்களின் பெயர்கள் மற்றும் தனிப்பட்ட முகவரிகள் யாவை,

(iv) இவர்களில் தங்கிவாழ்பவர்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவு எவ்வளவு

என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிட்ட மரணமடைந்தவர்களுக்காக சம்பளமும் ஓய்வூதியமும் செலுத்தப்படு மாயின் அக்கொடுப்பனவுகளைப் பெறுபவர்கள் யாவர்,

(ii) அது எப்பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகம் மூலமாக

என்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?